திருவள்ளுவர் ஆண்டு 2043

செப்டம்பர் - 2012

செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 11

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

23-7-2012 அன்று நடைபெற்ற செந்தமிழ்க் கல்லூரியின் பல்வகை சான்றிதழ் வகுப்புகள் தொடக்கவிழாவில் கல்லூரிச் செயலர் மற்றும் தமிழ்ச்சங்கச் செயலர் உடன் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. இரா. கண்ணன் அவர்கள்.

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 56 — திங்கள் இதழ்

பகுதி : 11 — திருவள்ளுவர் ஆண்டு 2043

செப்டம்பர் 2012

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

தமிழ் ஆங்கிலம் : உடம்படு மெய்கள்	பேராசிரியர் வெ. பெருமாள்சாமி எம்.ஏ., பி.காம்.,	4
கம்பன் உணர்த்தும் வாலியின் ஆளுமை	வெ. நடராசன்	15
சீன அறிஞரின் தீரா நூல் மோகம் !	கவிவேந்தர் கா.வேழவேந்தன்	25
திருவஞ்சைக்களம் பெயர்க் காரணம் – ஓர் ஆய்வு	தருமையாதீனப் புலவர் தா. குருசாமி தேசிகர்	26
பிறனில் விழையாமை	ஆறுவிரல் ஐம்பொறி	30
கலித்தொகையில் மரபு மாற்றங்கள்	ம. யாழினி	33

இதழ் மணம்

அன்புடையீர், வணக்கம் !

செந்தமிழ் மாத இதழ் தங்கள் கைகளில் தவழ்கிறது.

"இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும்"

என்ற தமிழ் இலக்கண அடிப்படையில் ஆங்கில ஒலிப்பு முறை அடங்கியிருக்கிறது என்ற ஆய்வை பேராசிரியர் வெ. பெருமாள்சாமி அவர்கள் விளக்கி இருக்கும் திறன் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

கம்பன் உணர்த்தும் வாலியின் ஆளுமை பற்றி "வீங்கினார்கள் தோள் வீரரை யார் வியவாதார்" என்ற கம்பனின் வாக்கு வழியில் நின்று வெ. நடராசன் அவர்கள் வியந்தோதி இருக்கின்றார்.

கவிஞர் கா. வேழவேந்தனின் மரபுக் கவிதை நம் நெஞ்சத்தைக் கவரும் திறத்தை உணரலாம்.

தருமையாதீனப் புலவர் தா. குருசாமி தேசிகரின் 'திருவஞ்சைக் களப் பெயர்க் காரணம்' சேரமான் பெருமான் நாயனாரின் வரலாற்றோடு வந்து சைவம் தழைக்கச் செய்கிறது.

பிறனில் விழைபவனை "அச்சம் எப்போதும் அவனை அச்சப்படுத்திக் கொண்டிருக்கும்" என ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் நீதி நூல்களின் சான்றுகளோடு எடுத்தாண்டிருக்கிறார்.

புலவர்களின் கருத்து வளமும் சமுதாய மாற்றமும் இலக்கியத்தில் புதிய உத்திகளையும் கட்டமைப்பினையும் உருவாக்கும் திறனை மா. யாழினி அவர்கள் "கலித்தொகையில் மரபு மாற்றங்கள்" என்ற கட்டுரையின் வழி நிறுவி இருக்கும் திறன் போற்றுதலுக்குரியது.

நல்ல பல சிந்தனைகளோடு கூடிய இம்மாத இதழ் வாசகர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பெறும் என்பதில் ஐயமில்லை.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

தமிழ் ஆங்கிலம் : உடம்படு மெய்கள்

பேராசிரியர் வெ. பெருமாள்சாமி எம்.ஏ., பி.காம்.,
சென்னை

கூடி வாழ்வது உயிரினங்களின் இயல்பு. அப்படி வாழத் தலைப்பட்ட மக்கள் பொருள்களைக் குறிக்கவும் செயல்களை உணர்த்தவும் பெரிதும் ஒலிகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவ்வக் குழு, இன, வாழிடங்களைச் சேர்ந்த மக்களுக்குக் குறிப்பிட்ட ஒலிகள் குறிப்பிட்ட எண்ணங்களை வெளிப்படுத்தின. ஒலியெழுப்பியவரும் கேட்டவரும் உரிய பொருள்களை உணர்ந்து கொண்டார்கள். அவையே அவ்வப்பகுதி மொழிகளாயின. அவற்றுள், வழக்காறு வலுப்பெற்று எழுத்து மொழியாகச் சீருற்று இலக்கிய இலக்கணச் செழுமை பெற்றனவும் (தமிழ்) உள. இன்றளவும் வரிவடிவம் பெறாமல் வாய் வழக்காக உலவும் மொழிகளும் (துளு, கொங்கணி) உண்டு. நன்கு அமைக்கப்பட்டும் மக்கள் வழங்காமையால் இறந்து பட்டனவற்றையும் (சமற்கிருதம்*) அறிவோம். ஆள்வோர் ஆதரவின்மையால் பயன்படுத்துவோர் அருகி மறைந்து போயினவும் (அசாமில் 'அஹோம்', அந்தமானில் 'போ') பல.

மொழிகளிடை இயைபு நிலை

உலகில் வெவ்வேறு நாடுகள் வேறு வேறு கூட்டத்தினர், பலப்பல மொழிகள் என்றிருந்தாலும், மக்களினத்தின் அடிப்படை உடற்கூறு, ஒலிகளைப் பிறப்பிக்க ஏதுவாக அமையும் இதழ் நா அண்ணம் முதலிய கருவிகள் எங்கும் ஒத்த தன்மையவே. எனவே, என்னதான் சேய்மை நிலத்து அயன்மொழிகள் எனினும் அவற்றிடை இயைபு நிலைகளை நுணுகிப்பார்ப்பவர் காண்டலும் கூடும். தமிழ் போலும் செவ்விய மொழிகளில் எழுத்துப் பிறப்பு, சொல்லிணைவு போன்றவற்றை ஆராய்ந்து அவற்றுக்கு இலக்கணம் கண்டு வளப்படுத்தியுள்ளார்கள். ஆங்கிலம் போன்ற சில மொழிகளில் ஒலிப்பு முறைக்கும் ஒலியழுத்தம் கொடுக்கும் தன்மைக்கும்

கவனம் செலுத்துகிறார்கள். எவ்வாறெனினும், மொழிகள் தமக்கு அமையும் ஏந்துகள் வாய்ப்புகள் முதலியவற்றால் வேற்றுத் தன்மைகளுடன் வளர்ச்சிகள் கண்டு மாறுபட்டு நின்றாலும், ஒத்த கூறுகளை ஒப்பிட்டு அறிதல் கற்பார்க்கு உவகையே நல்கும்.

உயிரின் வாதை

தமிழில் அ இ உ எ ஒ எனக் குறில்கள் ஐந்து; ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என நெடில்கள் ஏழு; ஆகப் பன்னிரண்டும் உயிரெழுத்துகள். இவை 18 மெய்களோடு சேர்ந்து உயிர்மெய் எழுத்துகளாதல் தனி நெடுங்கணக்கு.

ஆங்கிலத்தில் a, e, i, o, u எனும் ஐந்து மட்டுமே உயிரெழுத்துகள் (Vowels). இவ்வெண்ணிக்கைக் குறைவை அவர்கள் வாய்விட்டுச் சொல்வதில்லை. எனினும் அம்மொழி படும் இடர்ப்பாடுகள் அக்குறையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. ஒலிப்பதற்கான குறியீடுகள் (Phonetic Keys or Symbols) என ஒரு பட்டியலைத் திணைக்கு வைத்துக் கொண்டு ஓரளவு ஈடு செய்கிறார்கள். தமிழில் உள்ள 12 உயிரொலிகள் ஆங்கிலத்தில் இல்லையோ எனின் அவ்வாறன்று. எல்லா ஒலிகளும், இன்னும் கூடுதலாகக் கூட உள்ளன. ஆனால் சிக்கனமான எழுத்தெண்ணிக்கையில் மொழியை விரிவாக வழங்க முற்பட்டு வரிவடிவத்தில் கைவைத்து விட்டார்கள். விளைவு எந்த ஒலிக்கு எந்த எழுத்து என்ற தெளிவில்லை. ஒரு ஒலியைக் காட்சிப்படுத்த ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகளின் துணை வேண்டப்படுகிறது. அந்த வேடிக்கையைப் பட்டியலிட்டே பார்ப்போமே.

தமிழில் உயிரொலிகள்	ஆங்கில வடிவம்	ஆங்கிலச் சொல்லாட்சி	
அ	a	admit	(அட்மிட்)
	u	under	(அண்டர்)
	o	done	(டன்)
ஆ	a	car	(கார்)
	o	top	(டாப்)
	au	laugh	(லாஃப்)
	ou	bought	(பாட்)

தமிழில் உயிரொலிகள்	ஆங்கில வடிவம்	ஆங்கிலச் சொல்லாட்சி	
இ	e	me	(மி)
	i	pim	(பின்)
	o	women	(விமன்)
ஈ	ee	deer	(டீர்)
	ea	meal	(மீல்)
	ie	piece	(பீஸ்)
உ	u	put	(புட்)
	oo	book	(புக்)
	o	today	(டுடே)
ஊ	oo	cool	(கூல்)
	ou	soup	(சூப்)
எ	e	enter	(எண்டர்)
	ai	said	(செட்)
ஏ	a-e	cake	(கேக்)
	ae	aeroplane	(ஏரோப்ளேன்)
	ay	may	(மே)
ஐ	y	my	(மை)
	ye	bye	(பை)
	uy	buy	(பை)
	ie	die	(டை)
	i-e	mi le	(மைல்)
ஒ	o	one	(ஒன்)
ஓ	oa	coal	(கோல்)
	oo	door	(டோர்)
	ou	soul	(சோல்)
	o-e	more	(மோர்)

ஔ	ow	now	(நௌ)
	ou	out	(ஔட்)

பார்த்தீர்களா? எந்த ஒலிக்கு எந்த எழுத்து என்று அறுதி இல்லை. ஒரே ஒலிக்கு மாறி மாறிக் கூட்டணிகள். உயிரொலிப்பதற்கு மெய்யொலியோடு சேர்க்கை என்ன கொடுமை ஐயா இது? ஒரு சோற்றுப் பதமாக 'O' என்னும் ஆங்கில உயிரெழுத்தைப் பார்ப்போம். 'ஓ போடு' என்று திரைக் கலைஞர்கள் கிளர்ச்சிப் பாடல் அமைத்து விட்டார்கள். ஆனால் அந்த 'O'வுக்கு நேரும் நெருக்கடிகளைச் சொல்லி மாளாது.

'Look women! you do not come without tools once more'.

இத் தொடரில் 10 ஆங்கிலச் சொற்கள் உள்ளன. அவற்றில் 'O' புரியும் பதின்கவனப் பணியை ஆய்வோம்.

1. 'லுக்' என்ற சொல்லில் இரண்டு 'O' இருந்தும் அவை ஒலிக்காமல் உகரம் ஒலிக்கிறது?
2. 'விமன்' என்னும் சொல்லில் 'O' இகரமாக ஒலிக்கிறது.
3. மூன்றாவதில் You என எழுதிவிட்டு Yu எனச் சொல்ல வேண்டும். 'O' அமைதியாகி விட்டது.
4. do (டு) என்பதில் ஒகரம் உகரமாயிற்று.
5. நாட் என்னும் போது 'O'வை 'ஆ'வாக ஒலிக்க வேண்டும்.
6. Come (கம்) இல் 'O' அகரமாக நடிக்கிறது.
7. "without' (விதவ்ட்) என்கையில் 'U'வோடு சேர்ந்து அகர வகரமாக அதாவது ஔகாரமாகப் பலுக்குகிறது.
8. 'டூல்ஸ்'-ல் 'O' இரட்டித்து வர ஊகாரமாக ஒலிக்கிறோம்.
9. 'ஒன்ஸ்' என்னும் கிளவியில் வேறு வேடமில்லை. 'ஓ' ஆக இயல்பாக வருகிறது.
10. 'more' (மோர்) என்கையில் துணைக்குச் சொல் இறுதியில் 'e'யைச் சேர்த்துக் கொண்டு 'ஓ' போடுகிறது.

இப்படி ஆங்கில 'O' படும்பாட்டைக் கண்டு, 'இப்படியும் ஒரு வாழ்வோ?' என்று நம் தமிழ் ஓகாரம் வினாக் கண்ணீர் வடிக்கிறது. எதிரெதிர் வைத்து நோக்கினால் தமிழின் இயற்கை அழகையும், இல்லாத குறைக்கு இட்டு ஒட்டிக் குறைத்து அள்ளி அப்பிக் கொள்ளும் ஆங்கிலத்தின் ஒப்பனை மினுக்கையும் தெற்றெனத் தெளியலாம்.

மெய் உயிர் இணங்கிய மயக்கம்

நம் மொழியில் உயிர் என்றும், மெய் என்றும், மெய்யில் உயிர் சேர்ந்து உயிர்மெய் என்றும் பெயர்கள் இடப்பட்டிருப்பதே நுட்பம். உயிர்கள் தாமே இயங்க வல்லன. மெய்கள் அவ்வாறல்ல. உயிர் வந்த பிறகே அவை இயங்கும். அப்போது அவை உயிர்மெய். உடம்போடு உயிர் இணைவது இயற்கை. ஆனால் உயிரோடு உயிர் சேர்வதில்லை. எப்படி?

ஆயிரம் கதிர்கள் = ஆ + ய் + இ + ர் + அ + ம் +
க் + அ + த் + இ + ர் + க் + அ + ள்.

மேற்காணும் எடுத்துக்காட்டில் உயிரோடு மெய்யும் (ஆ + ய், இ + ர்), மெய்யோடு உயிரும் (ய் + இ, க் + அ), மெய்யோடு மெய்யும் (ர் + க்) அடுத்தடுத்து வருகின்றன. ஆனால் எங்கும் உயிரோடு உயிர்இணைந்து வரக் காணோம். அப்படியே விட்டுவிட்டால் எப்படி? உயிரும் உயிரும் அடுத்தடுத்து வரும் நேர்வுகள் இல்லவே இல்லையா என்ன? நிரம்பவே உள்ளன.

அதிலும் நம் மொழியில் சொல்லும் சொல்லும் அடுத்தடுத்து நிற்கையில் அவை சேர்ந்து கொள்கின்றன. உரை வழக்கிலும் செய்யுள் தொடர்களிலும் இப்புணர்ச்சிகள் பயின்று வருகின்றன. அவற்றுக்கு விதிகளும் விரிவாக வகுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் பெரும்பாலும் சொல்லோடு சொல் இணைவதில்லை.

(எ.டு) 1. மார்கழி + திங்கள் = மார்கழித் திங்கள்
Month + of + December = Month of December

2. கீழ் + அணை = கீழணை
Lower + dam = Lower dam

3. வேய் + குழல் = வேய்ங்குழல்
Bamboo = flute = Bamboo flute

ஆங்கிலச் சொற்கள் சிற்சில இணைதலும் உண்டு.

4. Can + not = Can't

5. Will + not = Won't

முதல் மூன்று எடுத்துக்காட்டுகளில் (1) உயிர் இறுதிச் சொல்முன் வல்லினம் (த்) மிகுத்து வந்ததற்கும், (2) மெய்யோடு உயிர் ஏறி இயல்பால் (ழ் + அ = ழ) இணைந்ததற்கும், (3) யகர இறுதிச் சொல் முன் வல்லின வருமொழி (கு) சேர்கையில் அதன் இனமான மெல்லெழுத்து (ங்) மிகுந்ததற்கும் புணர்ச்சியிலக்கண விதிகள் வழிகாட்டுகின்றன. ஆங்கில எடுத்துக்காட்டுகளில் சொற்கள் மிகுதியும் இணையாமலும், ஒரோ வழி இணைந்தும் வந்தனவற்றைக் காண்கிறோம்.

உடம்படு மெய்கள்

மேற்கண்டவாறு உயிர்முன் வல்லினம், மெய்முன் உயிர், சில மெய் முன் மெய் என்பன போன்ற உறழ்வுகளேயன்றி உயிர்முன் உயிர் வரும் தொடர்களை இனிப் பார்ப்போம். உயிரோடு உயிர் சேர்வதில்லை என்று முன்பு குறித்ததை மீள நினைப்போம். அவை தாமே சேர்வதில்லை. காந்தவியலில் எதிரெதிர் முனைகள்தாம் ஒன்றையொன்று ஈர்க்கும். வடதுருவமும் வடதுருவமும், அங்ஙனமே தென்துருவமும் தென்துருவமும் இணையா; விலகும். உயிரும் உயிரும் புணராத நிலையும் அத்தன்மைத்தே. தலைவனும் தலைவியும் ஊடல் கொண்டால் விட்டு விடுவதா? அவர்களைக் கூட்டுவிக்கக் குழந்தை முதலிய வாயில்கள் உள்ளனவே. அப்படி ஒரு வாயிலை இடைவைத்து இரண்டு உயிர்களைச் சேர்க்கலாமே. ஆம் அப்படித்தான். நாம் பேச்சிலும் எழுத்திலும் உயிரோடு உயிர் இணையாத நேர்வுகளில் யகரம் வகரம் இரண்டில் ஒரு மெய்யை இடையிட்டு அவற்றைச் சேர்த்து வழங்குகிறோம்.

(எ.டு) மணி + அடி = மணி + ய் + அடி = மணியடி
வாய்மை + இடத்த = வாய்மை + ய் + இடத்த
= வாய்மையிடத்த

மர + அடி	=	மர + வ் + அடி = மரவடி
அகரமுதல + எழுத்தெல்லாம்	=	அகரமுதல + வ் + எழுத்தெல்லாம்
	=	அகர முதல வெழுத்தெல்லாம்
எல்லா + உயிர்க்கும்	=	எல்லா + வ் + உயிர்க்கும்
	=	எல்லாவுயிர்க்கும்
ஈ + என + இரத்தல்	=	ஈ + ய் + என + வ் + இரத்தல்
	=	ஈயென விரத்தல்

இவ்வாறு இணையாத உயிர்களை இணைக்க 'ய்' அல்லது 'வ்' மெய்யெழுத்தை இடைப்பெய்து நாம் பேச்சிலும் எழுத்திலும் வழங்குவதை நம் இலக்கண ஆசிரியர்கள் கூர்ந்து அறிந்து அதற்கு உடம்படு மெய் எனப் பெயருமிட்டு உரிய இலக்கண ஒப்புதல் அளித்திருப்பதை எண்ணிப் பெருமிதம் அடைவோம்.

'எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்' (தொல். எழுத். 141)

'இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.' (நன். 162)

'உயிரீற்றின் முன் உயிர்முதல் வரின் உயிரோடுயிர்க்கு
மயக்கமின்மையின் புணர்ச்சியின்றி விட்டிசைத்து/
நிற்குமாகலின், உடம்படாத அவ்விரண்டும்
உடம்படுத்தற் பொருட்டு இடையே வரு
மெய்யை உடம்படு மெய் என்பவாகலின்...... '

(சங்கர நமச்சிவாயர் உரை)

இ, ஈ, ஐ இம்மூன்றனுள் ஒன்றை ஈற்றாக உடைய நிலைமொழி முன் யகரமும், ஏனைய உயிர்களை இறுதியாகக் கொண்ட சொற்கள் முன் வகரமும் உடம்படு மெய்களாக வரும் என்று நன்னூலார் சிறப்பாக வகுத்த நெறி மொழிச் செம்மையைத் துலக்கிக் காட்டுகிறது.

உடம்படு மெய்கள் உயிர்களை இணைக்கின்றனவேயன்றித் தொடரின் ஒலிப்பு அளவை மாற்றுவதில்லை. தனிமெய்க்கு ½ மாத்திரை ஒலியளவு என்றாலும் உயிரேற இடந்தந்து அப்பொடு பெய்த உப்பாகக் கரைந்து விடுவதால் தொடர்கள் சீராகத் தளைக்கப்படுதலில் இடரொன்றும் இல்லை. வடமொழி ஆட்சியில் உடம்படு மெய் வராமல். ஒரு குலைவு ஏற்படுதலைக் காணலாம். சர்வ + உத்தமன் = சர்வோத்தமன் என்றும், உபய + குசல + உபரி என்பது உபயகுசலோபரி என்றும் தொடர்கள் நெளிவதை உணர்க. வடமொழியாளரோடு நமக்கு இப்போதைக்கு வாது இல்லை. போகட்டும்.

ஆங்கிலத்தில் உயிரோடு உயிர்

இனி ஆங்கிலத்துக்கு வருவோம். அம்மொழியில் இருக்கிற ஐந்து உயிர்களில் சொல்லிறுதியாக வருவன குறைவே. You, flu எனச் சிலவற்றில் தவிர பெரிதும் சொல்லிறுதிகளில் 'u' இடம் பெறவில்லை. ஈற்றில் 'a' வருமிடங்களும் குறைவு. வினையிறுதியில் (verb) 'a' வருவதில்லை. இறுதியில் 'e' பல்கி வந்தாலும் அது இல்லாதது போல் இருக்கிறது. male,fine, bore என ஈற்றில் வரும் 'e' அமைதி காக்கிறது. அதைப் பற்றிப் பின்னர் தனி ஆய்வாக எடுத்துக் கொள்வோம். To, Do, Go என்னும் சொற்களில் 'o' ஈற்றுயிராக இடம் பெற்றுள்ளது. எப்படி இருந்தாலும், ஆங்கிலச் சொற்கள் தனித்தனி நின்றே தொடராக அமைவதால் அவற்றுக்கிடையில் புணர்ச்சி இல்லை. எனவே அதற்குரிய மாற்றங்களும் (விகாரங்கள்) இல்லை.

ஆனால், ஒரு சொல்லுக்குள்ளேயே இரண்டு உயிர்கள் சேர்ந்து வருகின்றன. மூன்று உயிரெழுத்துகள் கூடச் சில சொற்களில் (courageous) தொடர்ந்து வரக் காண்கிறோம். அவ்விடங்களில் நிலைமை எப்படி? அம்மொழிக்குத்தான் உயிரெழுத்துப் பற்றாக்குறை ஆயிற்றே. முன்பு பட்டியலில் பார்த்தவாறு இரண்டெழுத்துக் கூட்டணியில் ஓர் உயிரொலி பிறக்குமாயின் அவற்றை இல்லாத நெடிலுக்கு ஈடாகக் கொண்டு அவ்விடங்களில் உடம்படு மெய் வேண்டப்படா என்று விட்டு விடுவோம். நம் மொழியில் கூட அளபெடைகளில் 'குடிதழீஇ', 'கொடுப்பதூஉம்', 'போஒய்ப் பெறுவது எவன்? என்றெல்லாம் தேவை எழுகிறபோது நெடில்குறில் உயிர்கள்

அடுத்தடுத்து அமைந்து உடம்படு மெய் இன்றி மூன்று மாத்திரையாக நீண்ட ஒலியெழுத்துகள் இடம் பெறுவது ஈண்டு கருதத்தக்கது.

ஓரொலி ஈரெழுத்து என ஆங்கிலத்தில் வருவனவற்றுக்குக் கீழ்க்காண்பவையே எடுத்துக்காட்டுகள்.

au / ou	----	ஆ	----	taught, bought
ea	----	ஈ	----	mean
ae	----	ஏ	----	aerospace
oo	----	ஊ	----	brook
oa	----	ஓ	----	goal
ie	----	ஐ	----	pie
ou	----	ஔ	----	about

ஆங்கில உடம்படு மெய்கள்

அடுத்து, ஒரு சொல்லினுள் வரும் உயிரெழுத்துகளின் பிற உறழ்வுகளை ஆய்ந்தால் அங்கு உடம்படு மெய் இடையே ஒலிப்பதை உணரலாம்.

do + er = டுயர்

go + ing = கோயிங்

இரண்டிலும் யகர உடம்படு மெய்யொலி கேட்கத்தான் செய்கிறது. நாமே கேட்டுக் கொண்டிருந்தால் போதுமா? மொழிக்காரர்கள் ஏற்க வேண்டாவா? ஏற்காமல் என்ன செய்ய முடியும்? இதழ் நா அண்ணம் முதலிய எழுத்துப் பிறப்புக் கருவிகள் மக்களினத்துக்கே பொதுவானவை தாமே. அவற்றை ஆராய்ந்து நம் தொல்லாசிரியர்கள் வகுத்தளித்த உடம்படு மெய் பொய்யாகுமா? ஆகாது. ஆனால் அதற்கு இலக்கண நெறி ஒன்று இருப்பது பிற மொழிக்காரர்களுக்குத் தெரியாது.

ஆங்கிலம் தான் எழுதுவது ஒன்று சொல்வது இன்னொன்றாயிற்றே. அதனால் எழுத்துக்கும் உச்சரிப்புக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் பதிவு

செய்து நிலைப்படுத்த வேண்டும் அல்லவா? அப்பணியை ஆங்கிலப் பேரகராதிகள் செய்துள்ளன. ஒவ்வொரு சொல்லுக்கும் எழுத்துக் கூட்டல் (spelling), ஒலிப்பு அதாவது உச்சரிப்பு (pronunciation) என இரண்டு விளக்கங்கள் அகர முதலிகளில் உள்ளன. அவற்றைப் பார்த்தால் ஒரு சொல் எவ்வாறு எழுதப்பட்டிருந்த போதும் எப்படி ஒலிக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ளலாம். பன்னாட்டு ஒலிப்பியல் சங்கம் (International Phonetic Association) என ஒரு தலைமை அமைப்பு உள்ளது. அதன் ஒப்புதல் பெற்ற உச்சரிப்பு ஒலிவடிவங்களும் இப்பேரகராதிகளில் உள்ளன. அவற்றையும் துணை கொண்டு சில எடுத்துக்காட்டுகளை நோக்குவோம்.

ஆங்கிலச் சொல் (எழுத்து வடிவில்)	உச்சரிப்பு ஒலிவடிவம் (ஆங்கில அகராதிப்படி)	தமிழில் எழுத்தும் உச்சரிப்பும்
California	Kal-uh-faurn-yuh Kaelafornya	கலிஃபோர்னியா
armenia	ahr-me-nyah armimya	அர்மேனியா
pennsylvania	pen-suhl-veyn-nyah pensalveinya	பென்சில்வேனியா
seoul	seyool	சியோல்
behaviour	bih-heyv-yer	பிஹேவியர்
trial	trahyuhl	ட்ரயல்
wait	weyt	வெய்ட்
quality	kwolitee	க்வாலிடி குவாலிடி
quarrel	kwawr-uhl	க்வாரல் குவாரல்

மேற்பட்டியலில் உள்ள சொற்களில் உயிரை அடுத்து உயிர் வந்தக்கால் யகர (y) உடம்படு மெய்யும் வகர உடம்படு மெய்யும் ஒலிக்கப்படுவதை அறிகிறோம்.

ஒலிக்கப்படுவது மட்டும் தானா? தமிழில் உள்ளது போல் எழுத்தாக இடம் பெறாதா? ஏன் இல்லாமல் கீழுள்ள சொற்களில் உடம்படு மெய்யை வரி வரிவாகவே பார்க்கலாம்.

Tie + ing = Ty + ing = Tying

Peru + ian = Peru+u+ian = Peruvian

'டை'யில் ஐகாரம் வந்தவிடத்து 'ing' என்னும் உயிர் முதல் விகுதி சேர்கையில் யகரம் (y) எழுத்தாகவே இடம் பெறுதலை நோக்குக. அடுத்ததாக, பெரு என்பது தென்னமெரிக்க நாடு. இந்தியன், எகிப்தியன் என்பன போல, அந்நாட்டு மக்கள் – உணவு – பண்பாடு முதலியவற்றைக் குறிப்பிட Peruvian People, Peruvian food, Peruvian culture என அடைமொழியாக வழங்கப்படும் Peruvian எனும் சொல்லைக் கவனிப்போம். பெரு (Peru) என்னும் முற்றுகரச் சொல் முன் 'ian' என்கிற உயிர்முதல் பின்னொட்டு இணைகையில் வகர (V) உடம்டு மெய் ஒலி வடிவில் மட்டுமன்றி எழுத்து வடிவிலேயே இடை வந்திருப்பதற்கு, "ஏனை உயிர்வழி வவ்வும்" என்ற நன்னூல் நூற்பாவே இலக்கணமாக அமைந்துள்ளது. உடம்படுவோர் மகிழ்க.

முடிப்பு

மொழியொலிகள் எந்நாட்டவர்க்கும் பொது என்பதையும், ஒலிப்பு முறைகளை நுணுகிக் கூர்ந்தாய்ந்து நம் ஆசிரியர்கள் வகுத்தளித்த நெறிமுறைகள் பிற மொழிக்கும் பொருந்தும் என்பதையும் இதுகாறும் கண்டோம். எழுத்துக் குறைவுடைய ஆங்கிலம் எதிர்கொள்ளும் நெருக்கடியையும், வரிவடிவத்துக்கும் ஒலிவடிவத்துக்கும் வேறுபாடுற்ற போதும் அதன் ஒலிப்புமுறை நம் உடம்படு மெய் இலக்கணத்துள் அடங்கிக் கொள்வதையும் அறிந்து நம் செம்மொழித் தலைமையைப் போற்றுவோம்.

கம்பன் உணர்த்தும் வாலியின் ஆளுமை

வெ. நடராஜன்
பூண்டி

"யாமறிந்த புலவனிலே கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை. இது புகழ்ச்சி இல்லை " என்ற பாரதியின் வாக்கிற்கு ஏற்ப உலகப் புகழ்பெற்ற காவியங்களுக்கு நிகராகக் கம்பர் கம்பராமாயணத்தைத் தந்தார். ஹோமர், வர்ஜீல், மில்டன், தாந்தே, கதே இலக்கியவாதிகளுக்கு ஒப்பத் திகழ்கிற கம்பரின் இராமாயண நூல் பயன் சிறப்பிற்குரியதாகும்.

வ.வே.சு. ஐயர் கூறுவது போல, "வால்மீகி இராமாயணத்தையும் கூட பெருங்காப்பிய இலட்சணத்தின் அம்சங்களுள் அநேகமாய் அனைத்தையும் வென்று மூல நூலை முந்தி முன்னணியில் நிற்கிறது. பின் வந்த நூல்களுக்கெல்லாம் பெரும் புதையலாய் விளங்குகிறது" என்று கூறும் சிறப்பிற்கேற்ப அமைந்தது இந்நூல்.

பாத்திரங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியான ஆளுமைத் திறனைப் பெற்றிருக்கின்றன. ஆளுமைப் பாத்திரம் தொடங்கி எதிர்நிலைப் பாத்திரம் வரை ஒவ்வொருவரின் ஆளுமையையும் கம்பன் தெளிவுற எடுத்துரைக்கிறார்.

"இராம காதையில் இடம் பெறும் எல்லாப் பாத்திரங்களும் இன்னும் என்றும் உயிர்த்துடிப்புடன் வலம் வரும் அமரத்தன்மையைப் பெற்று விட்டன" (கம்பன் ஆய்வுக் கோவை, ப. 31) என்று கூறுவர்.

தமிழிலக்கியங்கள் காப்பியத் தலைவனைத் தன்னிகரில்லாதவனவாக அடையாளப்படுத்தின. இந்நிகழ்வு பின்னர் மாறியது. தலைவனுக்கும் எதிர்நிலைத் தலைவனுக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமான இடை வெளியை வெளிப்படுத்தின. இந்நிகழ்வு முறைகளை உடைத்தெறிந்தவன் கம்பனே. தமிழ்க் காப்பிய உலகமானது எதிர்நிலைத் தலைவனைக் கூட அனுதாபத்தோடு பார்க்கும் சூழலை உருவாக்கியது.

வாலியின் வலிமை குறித்துக் கூறும் கம்பன், "எதிர்நிலை நாயகனாக விளங்கும் இராவணனுடைய ஆற்றலை விடவும் மிகுதியான ஆற்றலை உடையவனாகச் சுட்டுகிறார். இராவணனை ஒரு காலத்தில் வாலி தன் வாலினாலேயே சுழற்றி அடித்தான் என்றால், அவன் ஆற்றல் எப்படிப்பட்டது என்று நாமே ஆராய்ந்து பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

வாலியின் பேராற்றலை அனுமன் ஒவ்வொன்றாக எடுத்துக் கூறும் போக்கானது இராவணனை விடவும் சிறந்தவனாக பெரியவனாக இராவணன், இராமன் என இரு பாத்திரங்களும் கண்டு சிந்தை செய்யும் அச்சம் கொள்ளும் பெரும் பாத்திரமே 'வாலி பாத்திரம்'.

வாலியின் வீரம்

சுக்ரீவன் போருக்கு அழைக்கக் கேட்ட வாலி கடுங்கோபமடைந்த நிகழ்வை மிக அழகாக சித்தரிக்கிறார் கம்பர்.

உருத்தனன் பொர எதிர்ந்து இளவல் உற்றமை
வரைத் தடந்தோளினான்; மனத்தில் எண்ணினான்
சிரித்தனன்; அவ்ஒலி; திசையின் அப்புறத்து
இரித்தது அவ்வுலகம் ஓர் ஏழோடு ஏழையும் (3948)

எழுந்தனன் வள் விரைந்து இறுதி ஊழியில்
கொழுந்திரைக் கடல் கிளர்ந்தனைய கொள்கையான்
அழுந்தியது அக்கிரி அருகில் மால் வரை
விழுந்தன தோள்புடை விசித்த காற்றினே (3949)

போய் பொடித்தன மயிர்ப் புறத்த, வெம்பொறி
காய்ப்பொடு உற்று எழு வட கனலும் கண்கெட
தீப்பொடித்தன விழி தேவர் நாட்டினும்
மீப் பொடித்தன புகை உயிர்ப்பு வீங்கவே (3956)
வீசின காற்றின் வேர் பறிந்து, வெற்பு இனம்

ஆசையை உற்றன அண்டமித்திகை

பூசின, வெண்மயிர் பொடித்த வெம் பொறி

கூசினன் அந்தகன்; குலைந்தது உம்பரே

என்று வாலியின் வீரத்தை "வலிய போருக்கு அழைத்தலும், வெகுண்டழுந்த வாலி மத்த யானையின் கொடிய முழக்கத்தை ஓர் ஆண் சிங்கம் கேட்டாற் போன்று இருந்ததாக வாலி வீரத்தை கம்பர் வர்ணிக்கிறார். சுக்ரீவன் துணிவை நினைத்து வாலி சிரித்த சிரிப்பின் ஒலி 14 உலகங்களையும் கடந்து ஒலித்தது. அவன் எழுந்ததால் மலை அழுந்தியது. அவன் தோள்களின் அசைவினால் அருகில் உள்ள மலைகள் வீழ்ந்தன. எல்லை யில்லாத சீற்றத்துடன் அவன் முழங்கிய முழக்கம் எட்டுத் திசைகளிலும் எதிரொலித்தது. அவன் புறப்பாடு கண்டு கூற்றுவனும் கூசினான். வானுலகம் குலைந்தது" என்று வாலி ஆற்றலை இராமனின் ஆற்றலுக்கு ஏற்ப வர்ணிக்கிறார் கம்பர்.

வாலியைத் தடுக்கும் தாரை

மனைவி தாரை வாலியைத் தடுக்க முனைகிறாள்.

தீயிடைத் தாரை என்று அமிழ்தின் தோன்றிய

வேயிடைத் தோளினாள் இடைவிலக்கினாள்

வாயிடைப் புகைவர வாலிகண் வரும்

தீயிடைத் தன்கெடும் கூந்தல் தீகின்றான் (3956)

என்று பாற்கடலில் அமுதோடு தோன்றிய திருமகளைப் போன்ற மனைவி தாரை தடுக்கும் நோக்குடன் வந்தாள். அப்போது வாலியின் கண்ணிலிருந்து வந்த நெருப்பு தாரையின் கூந்தலைத் தீய்த்தது. மேலும், அவன் என்னை விலக்காதே என்று,

விலக்கலை விடுவிடு விளிந்துளான் உரம்

கலக்கிஅக் கடல்கடைந்து அமுது கண்டுஎன

உலக்கஇன் உயிர்குடித்து ஒல்லை மீள்குவல்

மலைக்குல மயில்என மடந்தை கூறுவாள் (3957)

என் வலிமையைக் கலக்கிப் பாற்கடல் கடைந்தது போல அவன் உயிரைக் குடித்து உடனே வருவேன்; என்ற கூற்று வீரத்தின் மிகுதியை செவ்வனே எடுத்தியம்புகிறது.

வாலி சுக்ரீவன் போர்

மட்கலம் செய்யும் சக்கரம்போல வாலியும், சுக்ரீவனும் ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டு திரிந்தார்கள். இரு கடல்கள் போலவும், இரு மலைகள் போலவும் பிரிந்தும் இரு உடல்களில் எது எவருடைய ஆற்றல் எனத் தெரியாது ஒன்றுபட்டு அவர்கள் போர் புரிந்தனர்.

வாலிமீது பாய்ந்த இராமபாணம்

கார் உண்! வார்ச்சுவைக் கதலியின் கனியினைக் கழியச்

சேரும் ஊசியின் சென்றது நின்றது என் செய்ய **(4000)**

வாழைப்பழத்தில் ஊசி நுழைவது போல மிக எளிதாக இராமபாணம் சென்றது. எனினும் அம்பு திடுமென நின்றது என்று கம்பன் வாலியின் ஆளுமையை உணர்த்துகிறார்.

இராமபாணம் தானாகவோ மற்றவர் நிறுத்தவோ நில்லாத தன்மையை உடையது. ஆனால், அதுவே வாலி மார்பில் புகாது நின்றதால் இது பற்றி என்ன சொல்ல முடியும் என்று வியக்கிறான் கம்பன். அம்பு பாய்ந்த பின்னர், எய்தவன் யார் என்றும், வானை இடிப்பேன் மண்ணை வேரொடு பறிப்பேன் என்று எண்ணுகிற நிகழ்வோடு, கையாலும் காலாலும் வாயாலும் பாய்ந்த அம்பைப் பிடித்து வெளியே இழுக்க முயல்கிறான். முடியாததால் மண்ணில் உருளுகிறான்.

பற்றி வாலினும் காலினும் வலியுறப் பறிப்பான்

உற்ற உறாமையின் உலைவுறும் மலையென உருளும் **(4004)**

தேவர்களா? அவர்களால் இது முடியுமா? வலிமை போதாதே? வேறு யார்? மும்மூர்த்திகளையும் ஒப்பவனாகிய ஓர் இறைவனே இவனாம் என்றும் பலவாறு சிந்திக்கிறான். மும்மூர்த்திகளைத் தவிர எவராலும் வெல்ல முடியா

அரும்படைப்பே வாலி, எதிர்நிலைப் பாத்திரமாய்க் காட்சியளிப்பினும் ஆளுமையுடைய பாத்திரமாகவே அடையாளப்படுத்தப்படுகிறார்.

இராமனின் அம்பையே பறிக்கிறான். அது கண்ட தேவர்களும், அசுரர்களும் வியக்கின்றனர். இராமன் அம்பை இழுத்துவிட்ட வீரம் வாலியின் வீரமாய் மட்டுமே கம்பன் வெளிப்படுத்துகிறார்.

வீங்கினார்கள்தோள் வீரரை யார் வியவாதார் (4009)

வாலி அம்பை உருவிய பின்னர், உதிரம் பாய்ந்தது கண்டு உடன் பிறப்பு என்னும் பாசத்தால் கட்டப்பட்ட தம்பி சுக்ரீவன், கண்ணீர் சொறிந்து அவனும் தரையில் சாய்கிறான். இதனை,

ஓசைச் சோரியை நோக்கினன் உடன்பிறப்பு என்னும்
பாசத்தால் பிணிப்புண்ட அத்தம்பியும் பசுங்கண்
நேசத் தாரைகள் சொரிதர நெடுநிலம் சேர்ந்தான் (4011)

என்று குறிப்பிடுகிறார்.

இராமன் எனத் தெரிந்தும், இராமனைக் கேட்கும் கேள்விகள் இலக்கியச் சிறப்புடையதாகும்.

கோஇயல் தருமம் உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்
ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்! உடைமை அன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை (4020)

என்று இராமனைப் பார்த்து, ஓவியத்தில் எழுதினாலும் முடியாத அழகுடையவனே ! அரச நீதி உம் குலத்தினர் யாவர்க்கும் உடமையல்லவா? திருமகள் போன்ற ஜனகன் மகளை உன் உயிர்க்கு உயிரானவளைப் பிரிந்த பிறகு என்ன செய்வதென்று உனக்குத் தெரியாமல் போய்விட்டதா? என்று கேள்வி எழுப்புகிறான் வாலி.

அரக்கன் உன் மனைவியைக் கவர்ந்து போனான் என்பதற்காக குரங்கினத்து அரசைக் கொல்ல வேண்டுமென்று மனுநீதியில் சொல்லி உள்ளதா? உன் இரக்கத்தை எங்கே இழந்தாய் ! என்னிடம் என்ன தவறு கண்டாய் ! நீயே பெரும்பழியைக் கொள்ளும்படி நடந்து கொண்டால் உன் குலப்புகழை யார் காப்பாற்றப் போகிறார்கள்?

இரக்கம் எங்கு உகுத்தாய் என்பால்
எப்பிழை கண்டாய் அப்பா
பரக்கழி இதுநீ பூண்டால்
புகழையார் பரிக்கற் பாலார் (4021)

என்று கூட வாலி கோபம் கொண்டு இராமனைப் பார்த்து வினா தொடுக்கிறார். மேலும்,

இருவர் எதிரும் காலை இருவரும் நல் உற்றாரே
ஒருவர்மேல் கருணை தூண்டி ஒருவர்மேல் ஒளித்துநின்று
வரிசிலை குழையவாங்கி வாய்அம்பு மருமத்து எய்தல்
தருமமோ பிறிது ஒன்று ஆமோ? தக்கிதை என்னும்பக்கம்

என்று ஒரு போரில் இருவர் கலந்து கொள்கிறார்கள் அந்த இருவருமே உறவினர்கள். அவர்களில் ஒருவர் மேல் மட்டும் கருணைக் காட்டி மற்றொருவர் மீது மறைத்துவிட்டு, மறைந்திருந்து அம்பால் ஒருவன் மார்பில் எய்துதல் தருமமோ? தகாதது என்று ஆன பிறகு வேறு என்ன பெயர் சொல்லி அழைக்க முடியும்.

மேலும் உன் செயல் வீரமானதா? சட்டமா? மெய்நெறியில் ஒன்றா? உன் நாட்டிற்கு என் உடம்பு பாரமா? பகையா? பண்பில்லாமல் இரக்கம் (ஈரம்) இல்லாமல் இப்படி செய்வதா? என

வீரமன்று; விதியன்று; மெய்ம்மையின்
வாரமன்று; நின்மண்ணினுக்கு என் உடல்
பாரமன்று; பகையன்று; பண்பு அழிந்து
ஈரம் இன்றி இது என் செய்தவாறு அரோ? (4026)

இராமனை விமர்சனம் செய்யும் சிறந்த ஆளுமையுடைய பாத்திரமே வாலி. ஒருவன் போருக்கு அழைத்ததால் நான் வந்து போர் செய்யும்போது மறைந்து நின்று தாக்கினாயே இதுதான் மற்ற இடத்திலும் செய்து வீரம் எனப் பேசப் போகிறாயா?

வாலியைப் படுத்தாய் அலை; மன்அற
வேலியைப் படுத்தாய் – விறல் வீரனே (4031)

என்னை அழித்தாய் என்பதில்லை; அறத்தின் வேலியையே வீழ்த்தி விட்டாய் என்று பலவாறு பேசிய ஏச்சுகள் இராமனையும், இராமாயணத்தையும் எதிர்ப்பவர்கள் கூட இவ்வாறு கடுமையாக ஏசி இருக்க முடியாது. எதிர் நிலைப் பாத்திரமாய் சித்தரிக்கப்படுகிற கம்பனின் வாலிப் பாத்திரம் வால்மீகி தராத முக்கியத்துவத்தை தமது நூலின் மூலம் வெளிக் கொணர்கிறார்.

வாலி இறப்பு

வாலி இறந்து போகும் தருவாயில் இருவருக்குமான விவாதம் நடைபெறுகிறது. வாலியின் மீது அம்பு பாய்ந்ததற்குக் காரணத்தையும் வாலியின் தவறையும் கூறிக் கொண்டே இராமன் விளக்க, வில்லால் அம்பிட்டு என்னைக் கொன்றது முறையா? எனக் கேட்க இலக்குவணன் அதற்குப் பதில் கூறுகிறான்.

இலக்குவணின் பேச்சை வாலி ஏற்கிறான்.
கவிகுலத்துஅரசும் அன்ன கட்டுரை கருத்தில் கொண்டான்
ஆவியுறு மனத்தன்ஆகி அறத்திறன் அழியச் செய்யான்
புவியுடை அண்ணல் என்பது எண்ணினன் பொருந்தி; முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச் சொன்னான்

இராமன் அறம் தவறமாட்டான் என்று நீதிகளைக் கேட்ட பின்னர் வாலி வன் தலையினால் இராமனை வணங்கினான். தவறு செய்ததை ஒப்புக் கொண்டு எவ்வளவு பெரிய வீரம் மிகுந்தவராயினும் உண்மைக்கு தலை வணங்குவது போல வாலி இராமனைக் கண்டு வணங்குகிறான்.

தெய்வமாகவும் உண்மைத் தன்மையோடும் விளங்குபவன் இராமன் எனத் தாரையிடம் ஓரிடத்தில்,

உழைத்தவல் இருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்தயர் உலகினுக்கு அறத்தின் ஆறுஎலாம் (3965)

ஊழ்வினை தரும் துன்பத்தைத் தாங்காது கலங்கும் உலகிற்கு அறத்தின் நெறியெல்லாம் வகுத்து வாழ்ந்து காட்டும் இராமனுக்குப் பொருந்தாதபடி பேசினாய் என்று மனைவி தாரையிடம் இராமன் செயலைத் தொடக்கத்திலேயே எடுத்துரைக்கும் ஆளுமைப் பண்பாளன் வாலியே ஆவான்.

இறுதியாக வாலி அமைதியடைந்த பின்னர் அவனை விட்டு உயிர் வெளியேறும் போது குணங்களில் சில மாறுபாடுகள் தோன்றின. இராமனைக் கடவுளாகப் பாவித்து,

தீயன பொறுத்தி என்றான் சிறியன - சிந்தியாதான் (4061)

உயிர்களுக்குத் தாய்போல் அன்பு செய்து தருமமும் ஒழுக்கமும் பண்பும் பாருக்கும் தலைவனாக நிற்கும் உன் முன்னால் நேர்மை நெறி தவறிய நாயாக நான் நிற்கிறேன் என் தீமையை நீ பொறுத்து அருளுதல் வேண்டும் என்கிறான்.

மேலும்,

ஏவுகூர் வாளியால் எய்து நாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய் அறிவுதந்து அருளினாய்
மூவர்நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!
பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ! (4063)

நான் சொல்வதைக் கேட்க வேண்டுகிறேன். 'உன் கூர்மையான அம்பை ஏவி என் ஆவி போகும் நேரத்தில் நல்ல அறிவையும் ஏற்படும்படி செய்தாய். மும்மூர்த்திகளும் அவர்க்கு முதல்வனும் படைப்பு முழுவதும் அதற்கு அப்பாலும் எல்லாம் நீயே! பாவம், தருமம், பகை, நட்பு என்ற திரிபு

உணர்வுகளை எங்களுக்கு உணரச் செய்யுமாறு ஊட்டச் செய்பவனும் நீயே! என்னும் சிவபெருமான் கொடுத்த வரத்தையும் என் உடம்பையும், உயிரையும் உருவிப் போக உன் சரம் அல்லாது மற்றதற்கு வலிமை இல்லை என்கிறான்.

சுக்ரீவன் மீதான இரக்கம்

தன் தம்பி சுக்ரீவன் மீது இரக்கம் கொண்டு,

ஓவியஉருவ நாயேன்உளது ஒன்று பெறுவது உன்பால்
பூவியல் நறவம் மாந்தி புந்திவேறு உற்றபோழ்தில்
தீவினை இயற்றுமேனும் எம்பிமேல் சீறி என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான் (4068)

ஓவியத்து எழுதியது போன்ற உருவத்தானே தம்பி மது மயக்கத்தில் மதி மயங்கித் தவறு செய்யும் போது என்மேல் ஏவிய அம்பு எனும் யமனை அவன்மேல் செலுத்தாதே என்று வேண்டுவது மனிதப் பண்பின் சிறப்பாய் 'வாலி' பரிணமிக்கிறான்.

வாலி அங்கதனுக்குக் கூறும் அறிவுரை

பாலமை தவிர்தி என்சொல் பற்றுதியாமின் – தன்னின்
மேல்ஒரு பொருளும்இல்லா மெய்ப்பொருள் வில்லும்தாங்கி
கால்தரை தோயநின்று கட்புலக்கு உற்றது அம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்துஎன வணங்கு மைந்த (4089)

சிறுபிள்ளைத்தனமாக எதையும் கருதிவிடாதே, என் சொல்லைக் கேட்பாயாக. தனக்குமேல் பொருளில்லாத மெய்ப்பொருளே வில் தாங்கிப் பூமியில் நின்று நம் கண்ணிற்குப் புலனாகிறது. மயக்கம் தரும் பிறவி நோய் மீண்டும் வராமல் தவிர்க்கும் மருந்தே இந்த இராமன் என்று வணங்குவாயாக என்று அங்கதனிடம் கூறும் 'வாலி' கூறும் கூற்றானது அவனின் ஆளுமைத் திறனின் வெளிப்பாட்டையே கம்பன் நமக்குக் காட்டுகிறான்.

என் உயிரைப் போக்கினான் என்று கருதாமல் அவன் மலரடியைத் தொட்டு வாழ்க என்று தன் மகனுக்கு உயரிய செய்திகள் கூறும் வாலி,

தந்தையின் கடமையாக முன்நின்று இராமனை அங்கீகரித்து அறத்தை நிலைநிறுத்தும் பாத்திரமாக வலம் வருகிறான்.

தான்அடி தாழ்தலோடும் தாமரைத் தடங்க ணானும்
பொன்உடை வாளைநீட்டி நீஇது பொறுத்தி என்றான்
என்னலும் உலகம் ஏழும் ஏத்தின இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான் (4093)

என்றான் கம்பன்,

அடைக்கலம் தந்த பின்னர் இராமன் திருவடிகளைத் தொழுகிறான் அங்கதன். அவனை ஏற்ற இராமன் வாளை அவனிடம் தந்து ‘இதை நீ ஏற்பாயாக’ என்று கொடுக்கிறான். வாலி இறந்து தேவர் உலகம், பிரமன் உலகம் எல்லாம் தாண்டி அப்புறமாகிய நிலைபேறுடைய வீடுபேறு தரும் உலகிற்குச் சென்று சேர்கிறான் எனக் கிட்கிந்தைக் காண்டம் ஆளுமையுடைய பாத்திரமாய் வாலியையே முன்நிறுத்தியுள்ளது.

ஆளுமைத் தன்மையில் வாலியின் வீரமும், அவன் புரிந்து கொள்ளும் ஆற்றல் உடையவனாகவும் விளங்குகிறான். குறிப்பாகத் தவறாகச் சித்தரிக்கப்படும் வாலி இறுதியில் இறக்கும் தருவாயில் இராமனை வணங்குவது, சுக்ரீவனை ஏதும் செய்யாமல் பாதுகாக்கவும் எனக் குறிப்பிடுவது, அங்கதனுக்குத் தெளிவுறக் கூறி இராமனோடு அனுப்புவது உள்ளிட்ட அனைத்துச் செயல்களும் வாலிக்கு மட்டுமே கம்பராமாயணத்தில் தனிச்சிறப்பைக் கம்பர் உருவாக்கியுள்ளார். வாலியின் வலிமையை உணர்த்தும் ஒவ்வொரு வார்த்தையும் இராமனின் வலிமையோடு பொருத்திப் பார்க்கும் அளவுக்கு கம்பர் சிறந்த ஆளுமைப் பாத்திரமாய் வாலியை முன் நிறுத்தியுள்ளார்.

சீன அறிஞரின் தீரா நூல் மோகம் !

கவிவேந்தர் கா.வேழவேந்தன்

சீனத்தின் 'யுவான் சுவாங்' நாடு தோறும்
தினம்சுற்றி வலம்வந்த விந்தைச் செம்மல் !
ஞானத்தை முழுமையுடன் அடைவ தற்கே
நான்குசுவர்ப் பள்ளியறை போதா தென்றார் !
தேனடையைச் சமைக்கின்ற தேனீ ஓடிச்
செழும்மலர்கள் பலமூழ்கி நடத்தல் போலே,
நானிலத்துத் தேயமெலாம் சுழன்ற தோன்றல்
நம்நாடாம் இந்தியமண் வந்து சேர்ந்தார்.

வரலாற்றால், பண்பாட்டால், மாவீரத்தால்
மாட்சியுற்ற நம்நாட்டின் பெருமை யெல்லாம்
நிரல்நிரலாய்க் குறிப்பேட்டில் ஏற்றிக் கொண்டார்;
நெஞ்சினிக்கும் சுவடிகளைத் திரட்டிக் கொண்டார்;
தரந்தோய்ந்த சரித்திரநூல் படைப்ப தற்குத்
தம்நாடு புறப்பட்டார்; வழியில் ஆங்கே
இருந்ததொரு நதியினையே கடக்க வேண்டி
ஏற்றசிறு ஓடத்தில் ஏறிக் கொண்டார்.

சுடர்மேதை சுமந்துவந்த சுவடிப் பாரம்
தோணியதும் தாங்காமல் ஆட, ஓட்டும்
படகோட்டி, "பயணத்தைத் தொடர வேண்டின்
பன்னூல்கள் மூட்டையைநீர் எறிவீர்!" என்றான்.
"எடையால்தான் தடையென்றால் நானும் ஆற்றில்
இறங்கிஉடன் நீந்திவந்தே கரைசேர் கின்றேன்;
நெடும்உழைப்பால் நான்சேர்த்த நூற்செல் வத்தை
நேயமுடன் கரைசேர்ப்பீர்!" என்றார் ஏந்தல்.

திருவஞ்சைக்களம் பெயர்க் காரணம் ஓர் ஆய்வு

தருமையாதீனப் புலவர்
தா. குருசாமி தேசிகர்

திருவஞ்சைக்களம் கேரளாவில் உள்ளது. மலைநாட்டுத் தலம். திருச்சூரில் இருந்து 32 கி.மீ. தொலைவில் உள்ளது. மக்கள் வழக்கில் ஸ்ரீவாஞ்சிக்குளம் எனப்படுகிறது. சேரமான்பெருமாள் ஆண்ட கொடுங்கோலூர் 12 கி.மீ. உள்ளது. பரசுராமர் தாயைக் கொன்ற பாவம் நீங்க வழிபட்ட தலம். இங்குள்ள நடராஜர் சேரமான்பெருமாள் பூசித்தது. பஞ்சலோகச் சிலை. இதன் கீழ் திருவஞ்சைக்களத்துச் சபாபதி என எழுதப்பட்டுள்ளது.

சரித அடையாளம்

கோயிலின் பக்கச் சுவர்களில் யானை உருவங்கள் வெளியில் இருந்து கோவிலுக்குள் செல்வது போலவும், எதிர்ச் சுவரில் அவ்வானைகள் கோயிலில் இருந்து வெளிவருவது போலவும் சிற்பங்கள் உள்ளன. சுந்தரர் சேரமான்பெருமாள் உருவங்களும் உள்ளன. வெள்ளையானை மீதேறிக் கயிலை சென்ற சுந்தரரின் வரலாற்றுச் சுவடு பற்றிய குறிப்புகள், பல மலையாளிகளுக்குத் தெரியாவிட்டாலும், படித்த சில மலையாள அன்பர்கள் மட்டும் இதனை அறிவர் என்பர். கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தின் தலைவராக இருந்த சி.கே. சுப்பிரமணிய முதலியார் பெரும் முயற்சியால் அக்கால கேரள அரசின், திவானாயிருந்த சர்.சி.பி. இராமசாமி அய்யர், சர்.ஆ.கே. சண்முகம் செட்டியார் உத்திரவுப்படி, இத்தலத்தில் சைவப் பேரன்பர்களால் தமிழகச் சைவாதீனங்களின் ஆசியோடு, சுந்தரர் விழா இன்றும் ஆடிசுவாதி நாளில் நிகழ்கின்றது.

பெயர்க் காரணம்

திருவஞ்சைக்களம் கோயில் இருக்கும் பகுதியே மகோதை. இதன் பெயர்க்காரணம் கூறும் சேக்கிழார், "வளநகர்தான் கோதையரசர் மகோதையெனக் குலவு பெயரும் உடைத்து உலகில்" என்பார். இது சங்க காலத்து மாக்கோதை வேந்தன் பெயரைத் தொடக்கத்தே தாங்கியிருந்து,

பின்னர் மகோதையார் பட்டினம் என்ற பெயரால் நின்றது என்றும், இன்று அப்பெயர் மகாதேவர் பட்டினம், மகோதையார்புரம் எனவும் வழங்கி வருகிறது என்பர். சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன், கொங்கணரை வென்று கொங்குநாடு கடந்து, குடபுலமான மேலைக் கடற்கரையை அடைந்து அங்குள்ள கருவூரை எறிந்து வெற்றி கொண்டான்.

வெற்றியின் விளைவு

வஞ்சியாகிய சேரர் தலைநகர் "முற்றத்தில்" பெரும்போர் செய்து, கிள்ளி வளவன் வெற்றி பெற்ற நினைவாக "வஞ்சிக்களம்" என்று மாற்றினான். இது புறநானூறு 37ஆம் பாடலால் தெரியவரும். அக்காலத்தில் காவிரிக் கரையில் இப்போது உள்ள கரூவர் அதனால் வஞ்சிநகரம் என்று பெயர்மாற்றம் பெற்றது. அதன் அருகே ஓடும் ஆறு ஆன்பொருணை இன்று அமராவதி ஆயிற்று. சேரர் தலைநகர் வஞ்சி, வஞ்சிக்களம் என மாறியதனால் காவிரிக்கரை கரூவர் வஞ்சியான கருவூர் எனப்பட்டது. கல்வெட்டில் கருவூரான வஞ்சிமாநகர் எனக்காணப்படும். சங்க காலத்தின் வஞ்சிக்களம் பிற்காலத்தில் அஞ்சைக்களம் என மருவிற்று. அவ்வூர் கல்வெட்டுக்கள் திருவஞ்சைக்களம் எனக் கூறுகின்றன என்று ஔவை சு. துரைசாமி பிள்ளை (சைவ இலக்கிய வரலாறு) ஆய்ந்து கூறிய செய்தி திருமுறை உலகிற்கு அரிய நன்கொடையாகும். அவரது கொடைக்கு வணக்கம் செலுத்துவோமாக.

சேரமான் பற்றி

சேரமான் பெருமாள் நம்பியாருரனின் தொடர்புகொண்ட திருக்கண்டியூரில் ஆறு விலகிய அற்புதச் செயல்காரணமாக, சேரன் தன்நாட்டிலும் திருக்கண்டியூர் உண்டாக்கி, வழிபாட்டிற்கு கோயில் கட்டியதாக ஆய்வாளர் கூறுவர். சேரமான் பெருமாளின் சிவப்பற்றும், சுந்தரர் தோழமையும் அவர் அருளிய ஆதி உலாவும் வரலாற்றுக் கூறுகளாகும். சேரர்கள் பலரும் சிவபக்தர்களாக இருந்தமை, சங்க நூல்களால் தெரிய வரும். கன்னடியரும், தெலுங்கரும், சேரமான் பெருமாள் போன்ற ஒரு சிவபக்தி மிக்க பைந்தமிழ் அறிந்த மன்னரைத் தரவில்லை. திருமுறை ஆசிரியர்களில் ஒருவரான சேரமான் பெருமாள் நாயனார் போன்று, திராவிட இனத்து கன்னட தெலுங்கு மன்னர்களில் காணப்படாததற்கு காரணம், காலத்தால் முந்திப் பிரிந்து, தெலுங்கர், கன்னடியர், தமிழோடும் தமிழ் இனத்தோடும் ஒட்டுறவு இல்லாதவர் ஆகிவிட்டனர். வடபுலத் தாக்கம் மிகுதி என்பார் வரலாற்றார்.

சேக்கிழார் செய்தி

சேக்கிழார் அருளிய வெள்ளானைச் சருக்கத்தில் சேரமான் பெருமாள் சுந்தரரின் நட்பு போற்றப்படுகிறது. சுந்தரரைத் தன்னாட்டில் வரவேற்றுப், போற்றிய கட்டமைப்பு, அவர்கள் நட்பை விளக்கும் பாங்கு வியக்கத்தக்கது. சேரமானும், ஆரூரரும் இரு உடல்களே தவிர, உயிரால் ஒன்றாய்க் கலந்திருந்தனர் என்றும், ஒருவர் ஒருவரில் கலந்து, குறைபாடின்றி இருதிறத்து அன்பர்களும், இருவரின் உயர் காதல் பேரன்பைக் கண்டு வியந்தனர் என்றும், விவரிப்பார்.

பதிகத் தமிழ்

மலைநாடாகிய சேரநாட்டில் உள்ள சிவத்தளிகள் முழவதையும் சுந்தரர் தரிசித்தார். பின்பு திருவஞ்சைக்களத்தில் சுந்தரர் எழுந்தருளியிருந்தார். அத்தலத்துப் பெருமானை வணங்கி மகிழ்ந்து இருந்தபோது, அரிய சிந்தனை ஆரூரருக்குத் தோன்றியது. "அவனியில் விழுந்தெழுந்து, அலைப்புறும் மனைவாழ்க்கை அகலவேண்டும்" என்று எண்ணி "தலைக்குத் தலைமாலை" என்று தொடங்கும் தமிழ்மாலைப் பதிகம் பாடினார். அத்திருப்பதிகத்தின் உட்குறிப்பு "இவ்வுலகில் பாசம் அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டும்" என்று, பரமனிடம் பாடுகிடந்து சுந்தர் வேண்டிய செய்தியாகும். அச்செய்தி அடங்கிய ஆரூரரின் அருந்தமிழ் வரிகள் அஞ்சைக்களம் தந்த நன்கொடையாகும். செம்மொழிக்கும் அரிய ஆய்வுச் செய்தியாகும்.

ஆய்வுச் செய்திகள்

1. "சிந்தித்து எழுவார்க்கு நெல்லிக்கனியே"
2. "சிறியார் பெரியார் மனத்தேறலுற்றாய்"
3. "முந்தித் தொழுவார் இறவார் பிறவார்"
4. "இழைக்கும் எழுத்துக்கும் உயிரே ஒத்தியால்"
5. "குழைக்கும் பயிர்க்கோர் புயலே ஒத்தியால்"
6. "அடியார் தமக்கோர் குடியே ஒத்தியால்"
7. "பாடும் புலவர்க்கு அருளும் பொருள் ஏன்?"
8. "பரவித்தொழுவார் பெறு்் பண்டமென்னே?"
9. "ஆர்கும் அழிவும் அமைவும் நீயென்பன் நான்"
10. "சொல்வார் சொற்பொருளானவை நீயென்பன் நான்"
11. "நாக்கும் செவியும் கண்ணும் நீயென்பன் நான்"

என்பன போன்ற திருவஞ்சைக்களப் பதிகச் செய்திகள் நம்மை வியப்பில் ஆழ்த்துவதோடு, முறையான வாழ்க்கைக்கும் இறைவன் அருள் செய்வான் என்பதும் இதன் மூலம் விளங்கும்.

வரலாற்றுச் சிந்தனை

கன்னடரும் தெலுங்கரும் புதிய வரவாகிய சமண, பௌத்த சமயங்களில் ஆர்வமிக்கவராகி, தமிழைவிட்டு முன்னே தொடர்பு கொண்டிருந்தாலும், கன்னட நாட்டில் திருக்கோகர்ணம் தலமும், தெலுங்கு நாட்டில் திருப்பருப்பதம் என்னும் தலமும், திருமுறைத் தலங்களாக சைவத்தமிழ் எடுத்துக் காட்டும். திருவஞ்சைக்களம் ஒரு சேரமான் பெருமாளைத் தந்து, சைவப்பண்பாடு போற்றியது போல, திருக்கோகர்ணமும், திருப்பருப்பதமும் (ஸ்ரீசைலம்) சைவத் தமிழ்ப்பண்பாட்டு மன்னர்களைத் தரவில்லை. திருமுறை வரலாற்றில் தெலுங்கு மன்னரும், கன்னட மன்னரும் இடம் பெறவில்லை.

காம்பீலி

பெரியபுராணம், நேசநாயனார் பிறந்த ஊரை, காம்பீலி என உரைக்கும். அந்நகர் ஆந்திராவில் உள்ளது என்பர் சிலர். பலர் மயிலாடுதுறை கூறைநாட்டு ஊரைச் சேர்ந்தவர் என்பர். காலவெள்ளத்தில் சேரநாட்டு மன்னர்கள் இன்று, மலையாளிகள் என்று அழைக்கப்பட்டாலும், அவர்கட்கும் தமிழ் மக்கட்கும் உரிய சமயத் தொடர்பும், இயைபும் சிந்திக்கத்தக்கதாகும்.

இடைக்காலத்தில் தெலுங்கு மன்னர்கள் சிலர், சோழரின் சம்பந்தம் பெற்றிருந்தாலும், குலோத்துங்கன் போன்ற சோழமன்னர் சைவப்பண்பாடு வளர்த்திருந்தாலும், காலத்தால் முந்தியவர்கள், கன்னடியார் தெலுங்கர் மொழியால் மிக முற்காலத்தே பிரிந்ததால், சைவப்பண்பாடு புறந்தள்ளப்பட்டது. வடக்கே உள்ள எல்லோரா, அஜந்தாக் குகைகள் புத்த, சமணப் பெரும்பான்மை வளர்ச்சியைக் காட்டுவன என்பதை அறியலாம்.

திருவஞ்சைக்களம், வஞ்சிக்களம் மூலம் சோழன் கிள்ளிவளவனால் வந்த திருப்பெயர் என்பதையும், அதுவே சைவ சமய எழுச்சிக்காலத்தில் திருஅஞ்சைக்களம் என்று பெயர் பெற்று விளங்கியது என்பதையும் அறிந்து மகிழ்வோமாக.

பிறனில் விழையாமை

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

பிறனில் விழையாமை என்பது திருக்குறளில் உள்ள ஓர் அதிகாரத்தின் (91) பெயராகும். இத்தொடருக்குப் பிறருடைய மனைவியை விரும்பாதிருத்தல் என்பது பொருளாம். பிறனில் விழையாமை, ஆன்ற ஒழுக்கம் என்பதை அறிவுறுத்தவே தெய்வப்புலவர் ஒழுக்கமுடைமை அதிகாரத்தை அடுத்து இவ்வதிகாரத்தை அமைத்துள்ளார். இவ்வதிகாரத்திலுள்ள ஒரு குறட்பாவை ஆராய்வோம்.

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனன்றோ ஆன்ற ஒழுக்கு. (குறள் – 148)

இக்குறட்பாவில் பிறன்மனை என்ற தொடர் யார் யாரைக் குறிக்கிறது என்பதை நீதிவெண்பா 41ஆம் பாடல் பகர்கிறது. அப்பாடலை இங்கே காணலாம்.

கன்னியரை பொன்நாண் கழிந்தோரை மற்றயலார்
பன்னியரை மாயப் புரத்தையரை – முன்னரிய
தாதியரை நல்லோர் தழுவரினை யார்நரகத்
தீதுவரும் என்றே நினைந்து. பன்னியர் – பத்தினி

நோக்குதல் என்பது ஆய்தல் என்று பொருள்படும். பார்த்தல் வேறு நோக்குதல் வேறு. பார்த்துவிட்டுப் பார்த்த பொருள் பற்றி எதுவும் எண்ணாமல் விடல் பார்த்தல் ஆகும். பார்த்து விட்டு பார்த்த பொருள் பற்றி ஆய்வு செய்தல் திரும்பத் திரும்பப் பார்த்தல் நோக்குதல் ஆகும். பிறன் மனைவியைப் பார்க்கலாம் ஆனால் ஆய்வு செய்து நோக்குதல் கூடாது. இதனைக் கூறவே நோக்காத என்ற சொல்லை பொய்யில் புலவர் பயன்படுத்தியுள்ளார்.

பிறன்மனை நோக்காதிருப்பது பேராண்மை எனில் பிறன்மனை நோக்குவது பெரும்பெண்மையே. எனவே பிறன் மனை நோக்குபவன் பெண்தன்மையுடையவனே. அவனே ஆணாகவும் இருப்பதால் அவனை அலி (பேடி) என்று கூறுவதில் தவறொன்றுமில்லை. பிறன்மனை விழையாதவர் அலியாகி ஆடி (யாசித்து) உண்பார் என்று நாலடியார் 85ஆம் பாடல் நவில்கிறது.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் (குறள் - 34) என்றார் பொய் யாமொழி. ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றோர். (குறள் - 989) என்றும் பொய்யாமொழியே புகன்றுள்ளார். மனத்துக்கண் மாசிலன் வாழ்க்கை பிறனில் விழையாது அமையும். ஊழி பெயரினும் சான்றோர் தம் மனைவியை விட்டுப் பெயரார். எனவே பிறன்மனை விழையாமை சான்றோர்ககு அறன் என்று அறிவித்துள்ளார்.

வள்ளுவப் பெருந்தகை ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் (குறள் - 131) என்றார். ஆன்ற ஒழுக்கு என்பது இங்கே மாண்புடைய ஒழுக்கத்தைக் குறிக்கிறது. மற்ற ஒழுக்கங்களை விடப் பிறனில் விழையாமையே உயர்ந்த ஒழுக்கம் என்பதைத் தெரிவிக்கவே முப்பாலர் ஆன்ற ஒழுக்கம் என்றார்.

பிறனில் விழைபவனைக் கண்டு சினம் கொண்ட பொய்யாமொழி நீ உயிரோடு இருந்தாலும் இறந்தவனாகவே (பிணமாகவே) கருதப்படுவாய் (விளிந்தாரின் வேறல்லர். குறள் - 143) என்று இழித்துக் கூறுகிறார். ஒருவனை இதைவிட இழிவாகக் கூறமுடியுமா? பிறனில் விழைதல் மாபெரும் ஒழுக்கக் கேடு என்பதை இதன்வழி அறியலாம்.

1. பிறனில் விழைபவனை அச்சம் எப்போதும் நீங்காமல் இருக்கும் என்பதை நாலடியார் 83ஆம் பாடல் பகர்வதைக் காண்போம்.

புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சம் தோன்றாமல் காப்பச்சம்
எக்காலும் அச்சம் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்.

2. எதிலார் இற்கண் குருடனாய் வாழவேண்டும் என்று நாலடியார் 158ஆம் பாடல் அறிவுரை கூறுகிறது.
3. பிறனில் விழைதல் அம்மி துணையாக ஆறிழிந்த ஆறொக்கும் என்று நல்வழி 20ஆம் பாடல் பகர்கிறது.
4. பிறன் தாரத்து அற்றத்தை (மறைக்கத்தக்க உறுப்பை) நோக்காத கண்ணே சிறந்த கண்ணென்று அற நெறிச்சாரம் 103ஆம் பாடலில் மொழிந்துள்ளது.
5. மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும் என்று இராமலிங்க அடிகளார் தேற்றேகாரம் கொடுத்துள்ளார்.

6. தன் மனைவியுடன் பற்று மிக்கு வாழ்பவர் பசுவின் வால் பற்றி நதி கடப்பவர் என்றும் பிறனில் விழைபவர் நாயின் வால் பற்றி நதி கடக்க எண்ணுபவர் என்றும் நீதி வெண்பா 11ஆம் பாடல் பகர்கிறது.

7. போதம் தனம்கல்வி பொன்றவரும் காலமயல் மாதர்மேல் வைப்பார் மனம் என்று நல்வழி 36-ஆம் பாடல் பகர்கிறது. (பொன்ற - அழிய.)

8. கற்புடைய மங்கையரைக் கருத வேண்டா என்று உலக நீதி 4-ஆம் பாடல் உரைக்கிறது.

9. மாற்றான் மனைவியிடம் காணும் இன்பமானது ஒருவன் நச்சுப்பாம்பின் தலையைத் தன் நாவினால் தடவி இன்புறுதல் போன்றது என்று நாலடியார் 87-ஆம் பாடல் நவில்கிறது.

10. பெண் விழைவார்க்கில்லை பெருந்தூய்மை என்று அறநெறிச்சாரம் 104-ஆம் பாடல் அறைகிறது.

11. அறம், புகழ், கேண்மை, பெருமை இந்நான்கும் பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா என்று நாலடியார் 82-ஆம் பாடல் நவில்கிறது.

12. பிறனில் பிழைத்தான் எனப்பிறரால் பேசப்படுமேல் இழுக்காம் என்று அறநெறிச்சாரம் 89-ஆம் பாடல் பகர்கிறது.

13. நாலடியார், பிறன்மனை நயவாமை என்ற அதிகாரத்தில் பத்துப் பாடல்களைப் பகர்ந்துள்ளது.

14. மைவிழியார்தம் மனையகன் றொழுகு என்று கொன்றை வேந்தன் (78) கூறுகிறது.

15. பிறனில் விழைந்து முடமானவனைப் பற்றி திருமூலர் மொழிந்துள்ள பாடலையும் காண்போம்.

திருத்தி வளர்த்ததோர் தேமாங்கனியை
அருத்தமென் றெண்ணி அறையில் புதைத்து,
பொருத்தம் இலாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாரே.

பிறனில் விழையாமையை மேலும் பல நீதி நூல்கள் இயம்பியுள்ளன. அவற்றையும் தேடிக்கண்டு, படித்தறிந்து, ஆய்ந்து நோக்கி, வாழ்வில் கடைப்பிடித்து அமைதியும் இன்பமும் பெறுவோமாக.

கலித்தொகையில் மரபு மாற்றங்கள்

ம. யாழினி
அண்ணாமலை பல்கலைக்கழகம்

முன்னுரை

இலக்கியங்கள் என்பது மனவுணர்வுகளின் வெளிப்பாடாக அமைவதோடு, மனித வாழ்க்கையில் நிகழ்ச்சிகளை, பண்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றன. இவ்விலக்கியங்கள் ஒரு கட்டமைப்புக்குள் அடங்கும் வகையில் இலக்கணங்கள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இலக்கியங்களில் இருந்தே இலக்கணங்கள் உருவாக்கப்பட்டமையாலும், சமூக மாற்றத்தினாலும் இலக்கியங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இலக்கியங்கள் அவை தோன்றும் காலத்தின் புதிய பாடுபொருள்களையும் வடிவங்களையும் ஏற்கும் நிலையில் மரபு மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவ்வகையில் கலித்தொகையும் பிற சங்க இலக்கியங்களைக் காட்டிலும் பாடுபொருள்களில் சில மாற்றங்களைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மரபு மாற்றங்கள்

மரபு என்பது நீண்ட காலமாக மக்களின் பயன்பாட்டில் இருந்து, இலக்கிய வழக்கிலும் இடம்பெற்று நிலை பெற்றவையாகும். “மரபு” என்ற சொல்லாட்சி தமிழில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. தொல்காப்பியர் 'மரபு' என்பதை இலக்கணம் என்ற பொருளில் கையாள்கிறார். 'நூன் மரபு' 'மொழி மரபு', 'மரபியல்' என்று இயல்களின் தலைப்பிலேயே குறிப்பிட்டுள்ளனர்.

மரபு நிலை திரிதல் செய்யுட்கு இல்லை

மரபு வழிப்பட்ட சொல்லினான (தொல் – பொருள். 1590)

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டிருப்பினும், இலக்கியத்தில் மாற்றம் என்பது எற்பட்டுக் கொண்டேயிருக்கும். இது மொழியின் வளர்ச்சிக்கு உதவி புரிகின்ற பிறமொழி தாக்கத்தினாலும் இலக்கியத்தின் பொருண்மையும் வடிவமும் மாற்றம் பெறுகின்றன.

கலித்தொகை

கலித்தொகை பிற சங்க நூற்களிலிருந்து தொகுப்பு முறையில் மாறுபட்டுள்ளது. ஒவ்வொரு திணையும் அத்திணைப் பாடல்களின் தொகுப்பாக அமைந்துள்ளன. திணை வரிசையும் பாலை, குறிஞ்சி, மருதம்,முல்லை, நெய்தல் என்ற நிலையில் பிற நூல்களில் இருந்து மாறுபட்டுள்ளது.

சங்க இலக்கியங்களிலிருந்து யாப்பு வடிவில் வேறுபட்டுள்ளதால் பாடுபொருள்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இசையுடன் பாடப்படுதலின் நாட்டுப்புறக் கூறுகளான வள்ளைப்பாட்டு, குரவைப்பாட்டு போன்றவை இடம் பெற்றுள்ளன. அக இலக்கியங்கள், தலைவிக்குத் தோழி கூறுவது, நற்றாய்க்குச் செவிலி கூறுவது, தலைவி தன் நெஞ்சிற்குக் கூறுவது, தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவது என்று தன்நிலைக் கூற்றாக இருந்த நிலையிலிருந்து கலித்தொகைப் பாடல்கள் இருவரின் உரையாடல் வடிவாக வளர்ச்சி நிலை பெற்றுள்ளன.

> **யாப்பு வடிவங்களில் வேறுபாடுள்ளமையால் இப்பாடல்களின் பாடுபொருள்களிலும் விளக்கங்களிலும் மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. கலியும் பரிபாடலும் நரம்புக் கருவிகளின் இணைவோடு பாடப்பெறும் பாடலாகும். இப்பாடல்கள் கருத்திலும் இசையமையாலும் மக்களின் நாட்டுப்புறப்பாடல்களை மிக நெருக்கமாக ஒத்திருக்கின்றன. எனவே, அவை அக்காலச் சமூக மரபுகளோடு உடன்படுபவையாக உள்ளன.** (சங்க மரபு. 166 - 147)

என்பதன் மூலம் கலித்தொகையில் ம்ரபு மாற்றம் ஏற்பட்டாலும் சமூகத்தின் மரபுகளோடு ஒத்து வந்துள்ளன எனலாம்.

கைக்கிளையும் பெருந்திணையும்

கைக்கிளையும் பெருந்திணையும் பிற சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை. சிறுமை உறவு என்று கூறப்படுதலாலும் சான்றோர்கள் இதனை ஏற்காமையாலும் கைக்கிளையும் பெருந்திணையும் புலவர்களால் பாடப்படவில்லை. இந்நிலை கலித்தொகையில் மாற்றம் பெற்றுள்ளது. கலித்தொகையில் நான்கு பாடல்கள் கைக்கிளைக்குரியனவாகும்.

நேர்சிலம் பரியார்ப்ப நீரை தொடிக்கை வீசினை

ஆருயிர் வௌவிக் கொண்டறிந்தீயா திறப்பாய் கேள். (கலி. 58)

சிலம்பு ஒலிப்பக் கைவீசி என்னுயிரைப் பறித்துக் கொண்டு அறியாது செல்கின்றவளே என்று, தலைவன் தன்னுயிரைத் தானே பறிகொடுத்துப் புலம்புகின்றான்.

வருந்தமா ஊர்ந்து மறுகின்கப் பாடத்

திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே

பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை

போலக் கொடுத்தார் தமர். (கலி - 141)

கண்டவர்க்கு இரக்கம் தோன்றும்படி, தலைவன் மடலேறித் தன் காதலை வெளிப்படுத்துதல் பெருந்திணையின் பாற்படும்.

தலைமை மாந்தர்கள்

இலக்கியங்களின் தலைமை மாந்தர்களாகப் பெருங்குடி மக்களே இருந்த நிலையில் இருந்து அடியவரும் வினைவலரும் தலைமை மாந்தர்களால் பாடப்பட்ட 'மரபுப் புரட்சி' கலித்தொகையிலேயே இடம் பெற்றுள்ளன.

அளைமாறிப் பெயர் தருவாய் – அறிதியோ? அஞ்ஞான்று,

தளவமலர் ததைந்ததோர் கானச்சிற் றாற்றயல்,

இளமாங்காய் போழ்ந்தனன் கண்ணினால் என் நெஞ்சம்

களமாக் கொண்டு ஆண்டாய்; ஓர் கள்வியை அல்லையோ? (கலி–108)

கலித்தொகைப் பாடல்களுக்கு குற்றேவல் புரிபவர்கள் தலைமை மாந்தர்களாக உள்ளனர். இவர்களுக்கேற்ற மொழி நடையில் பாடல்கள் அமைந்துள்ளன. அகவாழ்விற்குப் பொருள்வளம் அடிப்படையன்று இருவரின் ஒன்றிய மனமே அடிப்படையாக அமைகின்றன என்பதை

ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை. (கலி - 9)

என்று கலித்தொகைக் குறிப்பிடுகிறது.

திணை மயக்கம்

திணை மயக்கம் என்பது சங்க இலக்கியங்கள் அனைத்திலும் இடம் பெற்றுள்ளன. கலித்தொகையின் குறிஞ்சித் திணையின் ஒழுக்கங்கள் பிற திணைகளில் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன. நெற்தற்கலியில் 14 பாடல்களும், முல்லைக்கலியில்.17 பாடல்களும் மருதத்தில் 2 பாடல்களும் குறிஞ்சிக்குரிய ஒழுக்கமாகும்.

ஏறு தழுவுதல்

முல்லைத் திணைக்குரிய போர்வயிற் பிரிவு பாடுபொருளாக அமையாமல், ஏறு தழுவுதல் நிகழ்ச்சியே பாடுபொருளாக அமைந்துள்ளது. ஆயர்களின் வாழ்க்கை கலித்தொகையில் முதன்மையாகக் காட்டப்படுகின்றன. முதற்பொழுதாகிய நிலத்திற்கும் காலத்திற்கும் சிறிதளவு முதன்மையே தரப்பெறுகின்றது. பிற முல்லைத் திணைப்பாடல்கள் கார்காலம் வந்தும் தலைவன் செலவு நீட்டித்தமையும் வினை முடிந்து மீளும் தலைவன் பாகர்க்கு உரைத்தமையும், முல்லை நிலக் காட்சிகளின் வர்ணனைகளையும் கொண்டதாகவே உள்ளன. இக்கருத்தினை,

> **ஏனையப் பாடல்களில் பின்னணியாக அமைந்துள்ள கோவலர் வாழ்க்கை கலித்தொகையில் முன்னணியாக அமைந்து, அவர்களது காதல் செய்திகளையே மையப் பொருளாய் விளக்குகிறது. நிலப்பின்ன பணியைக் காலப் பின்னணியோடு இணைத்துக் காணும் நிலையில் முல்லைப் பாடல்கள் உள. (சிந்தனை களங்கள் 33 - 34)**

என்று வ.சுப. மாணிக்கனாரும் குறிப்பிடுகிறார். முல்லைத் திணைப் பாடல்கள் யாவும் காதலர் பிரிவின் துயரையும் தோழி ஆற்றுவித்தல் ஆகிய பொருண்மைகளைக் கொண்டவையாகவே உள்ளன. ஆனால் கலித்தொகை, காதலர்களின் மகிழ்ச்சியினைக் காட்டுவதாக உள்ளன. முல்லைக் கலிப் பாடல்களுக்கும் பிற முல்லைத்திணைப் பாடல்களுக்கும் உள்ள வேறுபாடு இதுவே ஆகும்.

> **திணைப்பொருண்மையை நோக்கும் போது கலி முல்லைப் பாடல்கள் காதலர்கள் களித்திருக்கும் காட்சியைக் காட்டுகின்றன. பிற முல்லைப் பாடல்கள் காதலர் தனித்திருக்கும் துயரை வடிக்கின்றன. இது கலித்தொகை முல்லைப் பாடல்களுக்கும் பிற முல்லைப் பாடல்களுக்கும் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடாகும். (ஒப்பியல் நோக்கு 20 - 21)**

பாலைத்திணை

பாலைத்திணையில் பொருள் வயிற்பிரிவு பாடுவதே மரபாகும். ஆனால் பாலைக்கலி போர்வயிற்பிரிவு மேற்கொள்வதைக் குறிப்பிடுகிறது. பாலைக்கலியில் 17வது பாடல் தலைவனின் போர்வயிற்பிரிவைத் தோழி செலவழுங்குவித்தலாக அமைந்துள்ளது. பாலைக்கலி 26வது பாடல் பகை நாட்டில் உள்ள தலைவன் குறித்தப் பருவம் வந்து வாராமை எண்ணித் தலைவி வருந்துவதாக அமைந்துள்ளது.

ஒல்குப் நிழல் சேர்ந்தார்க்கு உடையாது காத்து ஓம்பி

வெல்புகழ் உலகேத்த நாட்டு உறைபவர்

நசைகொண்டு தம்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்

இசைபரந்து உகுஏத்த ஏதில் நாட்டு உறைபவர். *(கலி - 26)*

என்று தலைவன் பகைப்புலத்தில் உள்ளதைக் குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.

பாலைக்கலியில் 31-ஆம் பாடல் வெற்றி பெற்ற அரசன் கூடல் நகரின் கோட்டையில் நுழையும் போது வெற்றிக் கொடி ஏற்றப்பட்டதாகக் குறிப்பிடுவதிலிருந்து, அரசன் பாட்டுடைத் தலைவன் என்பதை அறிய முடிகிறது. கூடல் குறிப்பிடப்படுவதால் பாண்டிய மரபைச் சார்ந்தவன் என்பதையும் அறிய முடிகிறது. அகப்பாடல்களில் தலைவன் இன்னார் என்று குறிப்பிடுவது மரபன்று. எனினும் இத்தகைய மரபு மீறல்கள் கலித்தொகையில் காணப்படுகின்றன.

களவுக் காலத்தில் போர்வயிற் பிரிவு மேற்கொள்ளுதல் இல்லையெனினும், கலித்தொகை நெய்தல் திணையில் 31வது பாடல் திருமணத்திற்கு முன் போர்வயிற் பிரிவு துயரில் வருந்தும் தலைவியின் நிலையும் இறுதியில் தலைவன் வெற்றி பெற்று மீண்டும் வருவதாக அமைந்துள்ளது.

ஆய் இழை மடவரல் அவலம் அகல

பாய்இருள் பரப்பினை பகல்களைந்து போலப்

போய் அவர்க மண்வெனவி வந்தனர்

செய்உறை காதலர் செய்வினை முடித்தே. *(கலி - 148)*

பாலைத்திணையில் போர்வயிற் பிரிவு பேசப்பட்டிருப்பது, திறை கொண்டு வருவதும் பொருள் ஈட்டுதல் என்னும் வகையில் கொண்டனர் என்பதை அறிய முடிகிறது.

மரபுப் பெயர்கள்

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் மரபுப் பெயர்கள் சில, சங்க இலக்கியங்களில் மாற்றம் பெற்று வந்துள்ளன. கலித்தொகையில் தொல்காப்பியத்தில் இடம்பெறாத பெயர்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன.

குழவி

தொல்காப்பிய மரபியலில் குழவி என்னும் பெயர் யானைக் குட்டியைக் குறிப்பிடுவதற்கும் மக்களின் இளமைப் பெயராகவும், ஓர் அறிவு உயிரின் இளமைப் பெயராகவும் குறிக்கப்படுகிறது.

குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை (தொல். பொருள். 1518)

என்றும்,

குழவியும் மகவும் ஆயிரண்டு அல்லவை

கிழவ அல்ல மக்கள் கண்ணே. (தொல் பொருள். 1522)

என்பனவாகும். கலித்தொகையில் வருடைமானின் இளமைப் பெயராகவும் பிறை திங்கலையும் 'குழவி' என்னும் பெயரில் குறிப்பிடுகின்றார்.

வழை வளர்சாரல் வருடைநன் மான்

குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி (கலி 50)

என்றும்,

ஐய! திங்கட்குழவி வருக ! என யான் நின்னை

அம்புலி காட்டல் இனிது; மற்று இன்னாதே (கலி - 103)

என்பனவாகும்.

பெண்பாற் பெயர்கள்

சிறுமி

சிறு பெண்ணைக் குறிக்கும் சிறுமி என்ற சொல்லாட்சியானது,

வாய்வாளேன் நிற்பக் கடிது அகன்று கைமாறிக்

கைப்படுக்கப் பட்டாய் சிறுமி ! நீ மற்றுயான் (கலி - 65)

என கலித்தொகையில் இடம் பெற்றுள்ளன.

பெண் அன்று; புனை இழாய் எனக்கூறி தொழுஉம் தொழுதே (கலி-60)

என்றும்

பெண்டு எனப் பிறர் கூறும் பழிமறைப் பெறுகற்பின் (கலி - 77)

என்றும்,

ஒரூர் தொக்கிருந்த நின் பெண்டிருள் நேராகிக் (கலி - 68) என்றும்,

புலத்தொகைப் பெண்டிரைத் தேற்றி மற்று யாம் எனின் (கலி-73) என்றும் குறிஞ்சிக் கலியிலும் மருதக் கலியிலும் வந்துள்ளன. இகலாட்டி, சொல்லாட்டி, என்ற சொல்லாட்சிகளும் முல்லைக் கலியில் பெண்களைக் குறிப்பதாக வந்துள்ளன.

முடிவுரை

புலவர்களின் கருத்து வளமும் சமுதாய மாற்றமும் இலக்கியத்தில் புதிய உத்திகளையும் கட்டமைப்பினையும் உருவாக்குகின்றன எனலாம். மக்களின் பழக்க வழக்கங்களும் பல்வேறு நாட்டின் பண்பாட்டுத் தாக்கங்களினால் புதியன படைக்கப்படுகின்றன. கலித்தொகையில் பல்வேறு மரபு மாற்றங்கள் இருப்பினும் அவற்றைத் தன்னுடைய சிறப்புகளாகக் கொண்டு விளங்குகின்றது.

வாசகர் வாசகம் 1

நேரிசை வெண்பா

தெளி அமுதின் நேர்தமிழில் தேர்கட்டுரைகள்!
வளிமின்நேர் வாசகங்கள்! வாயில் - நளினம்
மிளிர்தோர ணம்நேர் இதழ்மணம்! நன்றி,
எளியேனின் பாசேர் எழில்!

அன்புடன்,
புலவர் சி. பாண்டுரங்கன், ஆம்பூர்

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ், 32,** மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/57 September 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.